**இலங்கை றக்பி நிறுவகம் - 2022**

---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை றக்பி நிறுவகத்தின் (''இலங்கை றக்பி நிறுவகம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை றக்பி நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வின் நோக்கெல்லை பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது இலங்கை றக்பி நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இயங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 17:19 பிரிவின் பிரகாரம் கிரயம் ரூபா 273,347 ஆன முழுமையாக தேய்மானமிடப்பட்ட சொத்து பொறி மற்றும் உபகரயங்களின் எஞ்சிய மதிப்பு, தேய்மானம் செய்யப்படுகின்ற முறை அல்லது பயனுள்ள ஆயுட்காலம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 17:31 பிரிவின் பிரகாரம் | ஏற்றுக் கொள்கின்றேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பெறுமானத் தேய்வு கொள்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் 10 சதவீதத்தினால் தேய்மானமிடப்பட்டிருந்தும் பெறுமானத் தேய்வு விகிதம் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | | | வெளிக்காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை**

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | செலவுகள் | 14,460,500 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் உரிய பதிவேடுகள் | உரிய உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த விடயங்களுக்கு முன் குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய மீதி | 15,827,184 | மீதி உறுதிப்படுத்தல்கள் | இப்பெற வேண்டிய தொகையில் உள்ளடங்கியுள்ள அனுசரணை தொகை 2023 ஆம் ஆண்டில் சங்கத்திற்கு பெறப்பட்டுள்ளது. | |
| (இ) | செலுத்த வேண்டிய மீதி | 37,522,801 | மீதி உறுதிப்படுத்தல்கள் | 2022 ஆம் ஆண்டிலும் செலுத்த வேண்டிய பெறுமதியில் பெருமளவில் காணப்பட்டமை ஒதுக்கங்களாகும். அது தொடர்பான மாதிரிப்படிவமொன்று இணைப்பாக நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 அக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க வர்த்தமானி பிரமாணங்களின் iii ஆம் பகுதியின் 07 ஆம் | முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் ஆண்டறிக்கை அதன் | ஏற்றுக் கொள்கின்றேன். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கத்தின் (xv)பிரிவிற்கான 2020 மார்ச் 10 ஆம் திகதிய 2166/09 ஆம் இலக்க திருத்திய வர்த்தமானி மற்றும் இலங்கை றக்பி அரசியலமைப்பின் 21.1(d) மற்றும் 33.9 பிரிவு | வருடாந்தப் பொதுக் கூட்டத்திலோ அல்லது விசேட பொதுக் கூட்டத்திலோ தாக்கல் செய்யப்பட வேண்டிய போதிலும் , 2021 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் II ஆம் பகுதியின் 5,4(ஐ)பந்தி | வர்த்தமானி அறிவித்தலின்படி நடவடிக்கை எடுக்கப்படாது 2022 ஆகஸ்ட் 27 அன்று நடைபெற்ற ரக்பி நிறுவனதயின் உத்தியோகபூர்வ தேர்தலில், 2022 ஜூன் 22 அன்று, தடை உத்தரவின் கீழ் வைக்கப்பட்ட முன்னாள் தலைவர் , துணைத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். | வழக்கு நடவடிக்கை யொன்று காணப்படுவதால் இன்னும் வழக்கு தீர்ப்பொன்று பெறப்படாமையால் மேற்கொண்டு கருத்து தெரிவிப்பதற்கு முடியாது. | சங்கங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது ஏற்கனவே உள்ள சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (இ) | இலக்கம் DSD/NSA/COM - 01/2021 ஆம் இலக்க மற்றும் 2021 திசெம்பர் 17 ஆம் திகதிய விளையாட்டு பணப்பாளர் நாயகத்தினால் தேசிய விளையாட்டு சங்கங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கோவையின் | | | |
| | (i) 3(iii) ஆம் பிரிவு | விளையாட்டு சங்கமொன்றில் பராமரிக்கக்கூடிய உத்தியோகபூர்வ நடைமுறை வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 02 ஆக இருந்த போதிலும், விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் இணக்கம் பெறப்படாமல் நான்கு வங்கிக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வந்தன. | எதிர்காலத்தில் இரண்டு மேலதிக கணக்குகளுக்கும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3(xiv) ஆம் பிரிவு | ரூபா 3,707,087 ஆன நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 700,981 ஆன சரக்கிருப்பு தொடர்பாக பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. | கடந்த ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் உங்களுக்கு வழங்கப் பட்டுள்ளன. நிறுவனம் அமைச்சினால் மூடப்பட்டுள்ளமையால் அவ்வாறு செய்வதற்கு சங்கத்திற்கு் முடியாதிருந்தது. | தற்போது மெய்மையாய்வு செய்யப்பட முடியும் என்பதால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை றக்பி அரசியலமைப்பின் 16,17 மற்றும் 18 ஆம் பிரிவுகள் | மேல் மற்றும் ஊவா மாகாண றக்பி சங்கங்களின் உறுப்புரிமை இலங்கை றக்பி சங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்தபோது அந்த சங்கங்கள் 2022 ஆகஸ்ட் 27 அன்று ரக்பி உத்தியோகபூர்வ தேர்தலில் பங்கேற்று இருந்தன. மேலும் இந்த சங்கங்களுக்கு 2022 திசெம்பர் 29 அன்று ஒரு சங்கத்திற்கு ரூபா 100,000 வீதம் ரூபா 200,000 நிதியுதவியும் வழங்கப்படடிருந்தது. | றக்பி விளையாட்டின் முன்னேற்றத்திற் காகவும் வீரர்களின் மேம்பாட்டிற்காக வும் சங்கத்தினால் அந்த மாகாணங்களில் றக்பி அபிவிருத்தி பணிகளுக்காக இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. | அரசியலமைப்புச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய கணக்குகள்

### 1.7.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடங்குகின்ற 06 வருடத்திற்கு மேற்பட்ட விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 02 மாகாண சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,214,473 ஆன முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில், இந்த இரண்டு சங்கங்களின் முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு சங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். | காலதாமதமான முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய கணக்குகளில் உள்ளடங்குகின்ற 1-2 வருடங்களுக்கிடைப்பட்ட பழைய | எதிர்காலத்தில், அதிகமான போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு மேலும் | கடன் கொடுத்தோர் நிலுவைத் |

| | | | |
|---|---|---|---|
| | மீதியான ரூபா 3,534,382 உம், மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியான ரூபா 31,154,768 உம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அனுசரணைகளைக் கண்டுபிடித்து இத்தொகையை தீர்ப்பதற்கு சங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். | தொகையைத் தீர்ப்பதற்கு தற்போதுள்ள கடப்பாடுகளை கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய மிகைக்கட்டணம் ரூபா 53,000 மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற செலுத்த வேண்டிய ஊழியர் இழப்பீடு ரூபா 1,000,000 மீளாய்வாண்டில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தற்போது சங்கத்தினால் செலுத்தப்பட்டுள்ளதுடன் பணிக்கொடைத் தொகை செலுத்தப்படவில்லை. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியை உரிய தேதியில் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதுடன், தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 3,810,997 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் , அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 658,202 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,469,199 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. ரூபா 5,123,841 ஆன நாணயமாற்று நட்டம் இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 மாதங்களுக்கும் மேற்பட்ட கூட்டுத்தொகை ரூபா 45,000 பெறுமதியான 07 காசோலைகள் இரத்து செய்யப்பட்டு புதிய காசோலைகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 6 மாதங்களுக்கும் மேற்பட்ட காலாவதியான காசோலைகள் இரத்து செய்யப்பட்டு மீண்டும் வழங்கப்படும் | காசோலைகள் மீண்டும் வழங்கப்படுவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆசிய றக்பி சங்கத்தினால் இலங்கை றக்பி சங்கத்திற்கு 2022 ஜுன் 22 ஆம் திகதி விதிக்கப்பட்ட தடை உத்தரவு காரணமாக, 2022 ஆம் ஆண்டில் | இது தொடர்பாக விசாரணையொன்று நடைபெற்று வருவதால், கருத்து தெரிவிப்பதற்கு | ஆசிய விளையாட்டு சங்கத்தின் அனுசரணையை பெற்று சர்வதேச |

| | | |
|---|---|---|
| இரண்டு நாடுகளில் நடைபெற்ற ஆசிய ஆண்கள் மற்றும் பெண்கள் போட்டிகளுக்காக இலங்கை றக்பி சங்கத்திற்கு ரூபா 30,783,149 செலவொன்று மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேலும் இந்தப் போட்டிக்கு தேசியக் கொடியின் கீழ் அன்றி ஒலிம்பிக் கொடியின் கீழ் பங்கேற்றிருந்தனர். | முடியாது. | போட்டிகளில் பங்கேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தேவையைக் கருத்திற்கொண்டு இருப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் 2022 திசெம்பர் 31 இல் ஐந்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ரூபா 147,185 ஆன இருப்பு காணப்பட்டது. | எதிர்காலத்தில், வருடாந்த சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டு 2023 ஆம் ஆண்டில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவைக்கேற்ப கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |